
www.tamilarangam.net

# தெங்தா 50



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெடிய நட்பின் ஓர் துளி

**வி.சிவலிங்கம்**

ஒரு மனிதனின் ஆயுள் ஐம்பதைத் தாண்டிவிட்டது என்றால் அது ஓர் அனுபவத்தின் ஆயுளைத் தான் குறிக்கிறது. எனது அன்பு நண்பர் சிறீ கெங்காதரனின் ஆயுள் ஐம்பதை எட்டிவிட்டது என்றால் ஓர் அனுபவத்தின் ஆயுளுக்கும் ஐம்பது ஆகிவிட்டது என்றே நான் கருதுகிறேன்.

நண்பர் கெங்காவிற்கு பல நண்பர்கள் இருந்தார்கள், இருக்கிறார்கள். இவர்கள் வெவ்வேறு குணாம்சங்களைக் கொண்டவர்கள். தனிப்பட்ட பழக்க வழக்கங்களில், அரசியல் நம்பிக்கைகளில், பொது வாழ்வில் இப்படி பல்வேறு வகைப்பட்டவர்கள் நண்பர்களாக உள்ளார்கள்.

இதற்குக் காரணம் கெங்கா இடத்திலும் பல்வேறு விதமான குணாம்சங்கள் நிறைந்து இருப்பது தான். அத்துடன் சகலரையும் ஏற்றுக் கொள்ளும் போக்கும், இணைத்துச் செல்லும் அனுபவமும் இருப்பதால்தான்.

கெங்காவிற்கும் எனக்கும் உள்ள உறவை ஆண்டுக் கணக்கில் விபரிப்பதை விட ஒரு மனிதனின் சிறந்த வாழ்க்கைக் காலம் எனக் கூறப்படும் இளமைக் காலம் முதல் இன்றுவரை எமது உறவு உள்ளது எனக் குறிப்பிடுவதே சாலப் பொருத்தமாகும்.

சீமெந்துத் தொழிற்சாலையின் தொழிலாளி ஒருவரின் மகனாகப் பிறந்த இவர் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படை நோக்கங்களை நன்கு உணர்ந்த தந்தையின் நேரடி வாரிசு என்றே குறிப்பிடுவேன்.

மற்றவர்களுக்காக உதவுவது, சமூக முன்னேற்றத்திற்காக உழைப்பது, தனது ஏனைய குடும்ப உறவினர்களின் நலன்களிலும் அக்கறை எடுத்துக் கொள்வது என்பன எல்லோராலும் நிறைவேற்றப்படுவதில்லை. இவ்வாறான உயர்ந்த மனப்பான்மை வளர்வதற்கு ஓர் மனப் பக்குவம் தேவை.

www.tamilarangam.net

இது சிறு வயதிலிருந்தே உருவாக்கப்படுகிறது. மற்றவர்களுக்காக பாடுபடும் உணர்வு சிலருக்கு ஓர் பொழுது போக்கு முயற்சியாக இருக்கலாம். ஆனால் கெங்காவைப் பொறுத்தவரையில் மிகச் சிறிய வயதிலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போக்கு அவரது குடும்ப உறுப்பினர்கள் எல்லோரிலுமே காணப்படுகிறது. அவர்கள் யாபேருமே ஒரே உணர்வில் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே அதன் உண்மையாகும்.

கல்வியில், விளையாட்டுத் துறையில், நாடகத் துறையில் ஓர் சிறப்பு வாய்ந்தவர் எனக் குறிப்பிடும்படியாக எந்தத் தகைமையும் இவரிடம் இல்லை. ஆனால் விளையாட்டுத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக காணப்படுகிறார். அம்பனை சூட்டிங் ஸ்ரார் என்ற விளையாட்டுக் கழகத்தினை ஆரம்பித்து கிரிக்கட் போட்டிகள், இரவு ஒளியில் உதைபந்தாட்டப் போட்டிகள் பல இவரது முன்னெடுப்பில் நடத்தப்பட்டன. அம்பனைக் கலைப்பெரு மன்றம் என்ற பெயரில் பல நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு யாழ். மாவட்டத்தின் சிறந்த நாடகங்களாகப் புகழப்பட்டுள்ளன.

தான் கல்வி கற்ற மகாஜனக் கல்லூரியின் உயர்ச்சிக்காக இன்று வரை பாடுபடுபவர்.

இளமைக் காலத்தில் இப்படியான முயற்சிகளில் ஆர்வம் கொண்டவர்கள் பலர் பின்னைய நாட்களில் தான் உண்டு தன் குடும்பம் உண்டு என விலகி குடும்ப வாழ்க்கையோடு தமது பயணத்தைத் தொடர்பவர்கள் ஏராளம்.

இப்படி பல்வேறு துறைகளில் மிக ஆர்வத்தோடு கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்து வருவதற்குக் காரணம் அவரது இதயத்தில் இன்றும் இணைந்துள்ள வர்க்க உணர்வுதான்.

இடதுசாரி அரசியலை நம்புபவர்களுக்கும், இதர அரசியல் போக்குகளை நம்புபவர்களுக்கும் இடையே பெரும் வித்தியாசம் இன்றும் இருந்துவருகிறது. அதாவது தனிப்பட்ட வாழ்க்கை, தனிப்பட்ட குணங்கள் என்பவற்றை அரசியலுடன் இணைத்துப் பார்க்கும் போக்கு அதாவது இடதுசாரி அரசியலை நம்புவர்களிடம் இவற்றினை மற்றவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் ஏனைய அரசியல் போக்குளை நம்புபவர்கள் தனிப்பட்ட வாழ்வில் எப்படி வாழ்ந்தாலும் அவை பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

இடதுசாரி அரசியலை நம்புபவர்கள் எந்தவிதமான ஆடைகளை அணிகின்றனர், பணக்காரருடனா, அல்லது ஏழைகளுடனா பழகுகின்றனர், அவர்கள் நேர்மையுடன் நடக்கிறார்களா என அதிகளவு நோட்டம் பார்க்கின்றனர்.
இதற்குக் காரணம் இடதுசாரி அரசியல் என்பது ஆங்கிலத்தில் Fairness என அழைக்கப்படும் நியாயத்தினை வற்புறுத்துகிறார்கள். இதனால் இடதுசாரி அரசியலை நம்புபவர்களும் நியாயமாக நடந்து கொள்கிறார்களா என எதிர்பார்க்கிறார்கள். இடதுசாரி அரசியல் தனிப்பட்டவர்கள் நியாயமாக நடந்து கொள்கிறார்களா? என்பது பற்றிப் பேசவில்லை. பதிலாக சமூக நிர்மாணங்கள், அல்லது சமூகக் கட்டுமானங்கள் நியாயத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என வற்புறுத்துகின்றது

நியாயத் தன்மை தொடர்பாக தனிப்பட்டவர்கயையும், சமூக நிர்மாணத்தையும் இவ்வாறு தவறாகப் பார்ப்பதனால் இடதுசாரி அரசியலை நம்பும் தனிப்பட்டவர்கள் அதிகளவு விமர்சனத்திகுள்ளாக்கப்படுகின்றனர். இதற்கு கெங்காவும் விதிவிலக்கு அல்ல.

பலருக்கு ஏணியாக நின்று அவர்களை உயர்த்திய இவர் அவர்களின் கண்டனங்களுக்கு உள்ளாகிய நிலமைகளையும் நான் அவதானித்துள்ளேன். இவரும் அவர்கள் வாழும் சமூகத்தின் ஓர் உற்பத்தியே என்பதை அவர்கள் அவதானிக்கத் தவறுகின்றனர்.

நாம் இருவரும் ஒரே அரசியல் சித்தாந்தத்தினை அதிக காலம் பின்பற்றி வருகிறோம். இதன் காரணமாக சில முக்கியமான சிக்கலான தருணங்களில் மிக இணைந்து சில கஸ்டங்களை அனுபவித்துள்ளோம். அதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தம் என நம்புகிறேன்.

1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு அமுலுக்கு வந்தது. இக் குடியரசு யாப்பு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வழங்காதது மட்டுமல்ல முன்னைய சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் 29வது சரத்தையும் நீக்கிவிட்டது என தமிழரசுக் கட்சி மிகப் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. கறுப்புக் கொடிகள் தமிழ்ப் பிரதேசமெங்கும் பறக்க விடப்பட்டன.

அந்த சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர உறுப்பினர்களாக நாம் இருந்தோம். 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பு பிரித்தானிய காலனித்துவ நுகத்தடியிலிருந்தும் நாட்டை முழுதாக

www.tamilarangam.net

விடுவித்து எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் ஓர் அரசியல் அமைப்பாக கம்யூனிஸ்ட் கட்சி கருதியது. இதனை முழுதாக நாம் ஏற்றோம்.

இலங்கைத் தேசத்தை ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து விடுவிப்பது முழுமையான சுதந்திரத்திற்கான முன் நிபந்தனை என்பதை நாம் ஏற்றுக் கொண்டோம். தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படாத அரசியல் யாப்பாக இருந்த போதும் தேசம் முழுதான சுதந்திரத்தினைப் பெறுவது அவசியம் என்பதனை உணர்ந்தோம்.

ஏகாதிபத்திய ஆதரவுப் போக்கினைக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களின் நலனை முதன்மையாக வைத்தே அரசியல் யாப்பு மாற்றங்களைப் பார்த்தது. இந் நிலையில் அரசியல் அமைப்பு மாற்றங்களின் மூலம் இலங்கை குடியரசாக மாற்றம் பெறும் அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினத்தை தமிழ் பேசும் மக்களில் ஒரு சாரார் ஏற்றார்கள் என்பதை வரலாற்று பூர்வமாக நிருபிப்பதற்காக குடியரசு தின மலர் ஒன்றினை இருவரும் இணைந்து வெளியிட்டோம்

தமிழ்ப் பிரதேசங்களில் குடியரசு தினத்தை ஆதரித்து வெளியிட்ட ஒரே ஒரு பிரசுரம் இது என நம்புகிறேன்.

அந்த முதலாவது குடியரசு தினம் இன்றுவரை தமிழ் பேசும் மக்கள் பலரால் எதிர்க்கப்பட்டு வருகின்ற போதிலும் தேசிய நலன் சார்ந்த வகையில் ஓர் முக்கிய தினம் என்பதை இன்றும் நம்புகிறேன்.

சமூக முன்னேற்றம் கருதி இலங்கையிலும், லண்டனிலும் இவர் எடுத்த, எடுக்கின்ற முயற்சிகள் பல. ஒரு மனிதனின் சமூக வாழ்வு அவன் உயிருடன் வாழும்போது நினைவு கூரப்படுவது எதிர்காலச் சந்ததியினருக்கு ஓர் உணர்வை வழங்கும் என நம்புகிறேன்

எனது வாழ்க்கைக் காலத்தில் இவ்வாறான வாழ்க்கைக் குணாம்சங்களைக் கொண்ட இனிய மனிதனை நண்பனாகப் பெற்றதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன். எனது நினைவின் சிறு துளிகளை பகிர்ந்து கொள்வதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

கெங்காவைப் பெற்ற தாய் சிவகெங்கைக்கு எனது வணக்கங்கள்.

## அம்பனை தெல்லிப்பழை நாகலிங்கம் சிறீ கெங்காதரன் அவர்களின் 50வது அகவைப் பூர்த்தியை குறித்து சில குறிப்புகள்

| | |
|---|---|
| 1950-12-21 | **பிறப்பு** - அம்பனை-தெல்லிப்பழை நாகலிங்கம்- சிவகெங்கை தம்பதிகளின் மூத்த புதல்வன் |
| 1955-1968 | **தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி**<br>சாரணீயத்தில் குழுத் தலைவர் இராணியின் விருது பெற்றமை |
| 1970-1975 | **கல்வி கற்பித்தல்**<br>காங்கேசன்துறை கல்விக்கூடத்திலும் அம்பனை கல்விக் கூடத்திலும் சிறுவகுப்பு ஆசிரியராக கடமை புரிதல் |
| 1972-1974 | **தொழில் புரிதல்** - யாழ்ப்பழபாணம் தேசிய வீடமைப்பு திணைக் களத்தில் கடமையாற்றுதல் |
| 1975 | **லண்டன் வருகை**<br>நண்பர்களின் அழைப்பின் பேரில் கல்வி கற்பதற்காக லண்டன் வருகை |
| 1976 | **தந்தையாரின் மரணம்** - 1976 நவம்பர் மாதம் திடீர் சுகவீனம் காரணமாக யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தந்தையைக் காண இலங்கை பயணம். உயிருடன் காணமுடியாமல் 6-12-1976 இல் அமரரான அன்னாரின் இறுதிக் கிரியைகளை மாத்திரமே செய்ய முடிந்தமை |
| 1980 | **திருமணம்** - இலங்கை சென்று தான் விரும்பிய ஜெயகௌரியை 8-2-1980 இல் திருமணம் செய்தமை |
| 1984 | **தந்தையாதல்** - 29-1-1984 இல் ஜெயகௌரி ஜனகன் என்கின்ற ஒரே மகனைப் பெற்றெடுத்ததின் மூலம் தந்தையானமை |
| 2000 | **ஐம்பது வயது** - 21-12-2000 அன்று ஐம்பது வயதினைப் பூர்த்தி செய்து இன்று இடம்பெறும் விழாவின் நாயகன் ஆனமை |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*பொதுவாழ்க்கை - சில குறிப்புக்கள்*

**அம்பனை - வைரவர் ஆலயம் (1961-1975)**

நீண்ட காலம் மிருக பலி கொடுக்கப் பட்டு, பின் நிறுத்தப்பட்ட (மகாஜனக் கல்லூரிக்கு அருகிலுள்ள) வைரவர் ஆலயத்திற்கு இளைஞர்களுடன் சேர்ந்து நரசிம்ம வைரவர் என்பதனை மாற்றி ***ஞான வைரவர் ஆலயம்*** என்று பெயரிட்டு வெள்ளிக்கிழமை தோறும் வழிபாட்டினையும் கூட்டுப்பிரார்த்தனையும் ஆரம்பித்தமை. இடப் பெயர்வு வரையும் முப்பது ஆண்டுகளாக இது தொடர்ந்தது

**அம்பனை - சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் (1968-1975)**

மகாஜனக் கல்லூரியில் மாணவனாக இருந்த வேளையில் அதிபருடனும் விளையாட்டுப் பயிற்சியாளருடனும் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றினை அடுத்து சக மாணவ நண்பர்களுடன் சேர்ந்து கல்லூரி தேனீர்ச்சாலையிலேயே விளையாட்டுக் கழகத்தை நிறுவியமை

1968 இல் இருந்து 1975 இல் இங்கிலாந்து வரும் வரையும் கழகத்தின் ***செயலாளராக*** கடமை புரிந்தமை

1969இல் இருந்து 1975 வரை யாழ்ப்பாணத்தின் மிகச்சிறந்த ***மென்பந்து கிரிக்கெட்*** போட்டியை நடாத்தியமை

1971இல் கொழும்புக்கு வெளியே முதலாவது ***மின்னொளி உதைபந்தாட்ட*** போட்டியை, மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடத்தியமை. யாழ்ப்பாணத்தின் பிரபலமான பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகள் கலந்து கொண்ட இந்த இரவு நிகழ்ச்சி மிகப் பெரிய வெற்றி

1972இல் மீண்டும் ***மின்னொளி உதைபந்தாட்டத்தை*** இரண்டு நாட்கள் வெற்றிகரமாக நடாத்தியமைதெல்லிப்பழை, பன்னாலை, கொல்லங்கலட்டி என்கின்ற கிராமங்களில் அங்கத்தவர்களான இளைஞர்களை தலைமை ஏற்று சிரமதானங்கள் செய்தமை



**தெல்லிப்பழை-கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் (1972-1973)**

தெல்லிப்பழை-கிழக்கில் நீண்ட காலமாக செயற்பட்டு வந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராக, அன்றைய செயலாளரும் பின்பு தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகவும் வுசுழு வின் தலைவராகவும் கடமையாற்றிய திரு யோகநாதனுடன் இணைந்து கிராமத்தின் அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பு நல்கியமை

**மகாஜனக் கல்லூரி இரசிகர் சங்கம் (1971)**

மகாஜனக் கல்லூரி யாழ் மாவட்டத்தில் சாதனைகள் புரிந்து 1971இல் அகில இலங்கைச் சாம்பியன்களாகி வெற்றிவாகை சூடியதன் நினைவாக நண்பர்களுடனும் சில ஆசிரியர்களுடனும் இணைந்து மகாஜன இரசிகர் சங்கத்தை உருவாக்கி ***மகாஜன உதைபந்தாட்ட மலரினை*** ஆசிரியராக இருந்து வெளியிட்டமை

இந்த மலர் இலங்கைப் பாடசாலை ஒன்று விளையாட்டுக்காக வெளியிட்ட ஒரே மலராகும்.. மகாஜனாவின் அன்றைய காலம்வரையான முழுமையான உதைபந்தாட்டச் சரித்திரத்தையும் அதனது வெற்றிகளையும், தனிப்பட்ட வீரர்களினது சாதனைகளையும் அச்சில் பதித்த சாதனையாக பாராட்டப் படுபவை

**மகாஜன பழைய மாணவர் சங்கம்-தெல்லிப்பழை 1973-1975**

கல்லூரியில் இயங்கும் மகாஜன பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக 1972 முதல் மூன்று ஆண்டுகள் செயற் பட்டமை

கல்லூரியின் வளர்ச்சிக்காக கல்லூரி அதிபரினாலும் நிர்வாகசபை யினாலும் எடுக்கப் பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுமையாக ஒத்துழைத்தமை

அதிபர் ஜயரத்தினத்தின் திடீர் ஓய்வினால் ஏற்பட்ட மாற்றங்களில் சகலருடனும் சேர்ந்து புதிய அதிபர் சிறப்பாக செயற்பட ஒத்துழைத்தமை

www.tamilarangam.net



**காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச் சபை (1972-1974)**

ஐக்கிய முன்னணி அரசில் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்த காலகட்டத்தில் தொகுதியின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு ஊருவாக்கப்பட்ட காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திச் சங்கத்தின் செனலாளராக கடமையாற்றியமை

தோழர் வி பொன்னம்பலத்துடனும் தொகுதியிலுள்ள ஐந்து ஊராட்சி மன்றங்களின் தலைவர்களுடனும் இணைந்து தொகுதி முழுமைக்குமான தேவைகளை அரசிடம் பெற்று செயற்படுத்த முன்னின்றமை

**காங்கேசன்துறைத் தொகுதி வீடமைப்புச் சங்கம் (1973-1974)**

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள வறுமையான மக்கள் வீடுகள் கட்டுவதற்காக அரசின் ஒத்துழைப்பைப் பெற்று செயற்படுவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட வீடமைப்புச் சங்கத்தின் அமைப்பாளராக செயற்பட்டமை

அரசிடம் குறைந்த வட்டிக்கு கடன் பெற்று, பல நூற்றுக்கணக்கான வீடுகள் உருவாக உதவியமை

**மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் (1967-1975)**

இலங்கையின் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திவருடாந்த உற்சவங்களின் போது தெல்லிபழை-கிழக்கு கிராம சேவகர் திரு கனகசபையுடனும் மாவிட்டபுரம் கிராமசேவகர் திரு நடராஜாவுடனும் இணைந்து அனைத்துக் கல்லூரி சாரணர்களையும் ஒருங்கிணைத்து வீதி ஒழுங்குப் பராமரிப்பில் ஈடுபட்டமை. மேறபடி கிராமசேவகர்களுடன் இணைந்து வருடாவருடம் ஆலய ஒலிபெருக்கு சேவையை நடாத்தியமை

மாவிட்டபுரம் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு ஆடி அமாவாசையன்றும் முதல் நாள் இரவு முழுவதும் கீரிமலைக் கடற்கரையில் இடம் பெறும் நிகழ்ச்சியின்போது தெல்லிப்பழை கிராம சபையுடன் இணைந்து ஒலிபெருக்கி சேவையை ஆண்டுதோறும் நடாத்தியமை

கெங்கா - 50

**அம்பனை - கலைப்பெரு மன்றம் (1968-1975)**

இன்றைய தினக்குரல் ஆசிரியர் ஆ. சிவனேசச்செல்வனுடனும் கிராமத்தின் வேறு இளைஞர்களுடனும் சேர்ந்து 1968 ஐப்பசி மாதம் கடைசி வெள்ளிக் கிழமை வைரவர் ஆலய முன்றலில் மன்றத்தை ஆரம்பித்து மன்றத்தின் முதலாவது செயலாளராக (இணை) தனது 17ஆவது வயதில் தெரிவானமை

சமயத்தையும் இணைத்து செயற்பட்டால் மாத்திரமே ஊரவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறலாம் என உணர்ந்து, அதனையே சங்கத்தின் செயற்பாடாக உருவாக்கி மன்றத்தை மிகச் சிறந்ததாக வளர்த்தமை

1968-1975 வரையான எட்டு ஆண்டகளில் ஏழு ஆண்டுகள் தைப்பொங்கல் நாளில் ***உழவர் விழா*** என சிறந்ததான கலை, இலக்கிய விழாக்களை நடாத்தியமை

கிராமத்தையும் அண்டிய பகுதிகளையும் சேர்ந்த இலை மறையாக இருந்த கலைஞர்களை விருது வழங்கி கௌரவித்தமை

அன்றைய காலத்தின் மிகச் சிறந்ததான தமிழ் அறிஞர்களை-திரு க கைலாசபதி, திரு கா சிவத்தம்பி, திரு சு வித்தியானந்தன், திரு வி பொன்னம்பலம், திரு அ அமிர்தலிங்ம்- போன்ற பல அறிஞர்கள் இவ் விழாக்களில் பங்குபற்ற வைத்தமை

எட்டு ஆண்டுகளும் தொடர்ச்சியாக, வைரவர் ஆலயத்தில் திருக்கார்த்திகை நாளன்று ***தீபத்திருவிழாவை*** சமய அறிஞர்களை அழைத்து நடத்தியமை

எட்டு ஆண்டுகளும் வைரவர் ஆலயத்தில் அதிகாலை ஐந்து மணி தொடக்கம் ***திருவெம்பாவை விழாக்களை*** சிறந்த முறையில் நடத்தியமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கலைப்பெருமன்றம் ... தொடர்..**

மன்றமே நாடகக் குழுவை உருவாக்கி பத்துக்கு மேற்பட்ட சிறந்த நாடகங்களை தயாரித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெற்றிகரமாக மேடையேற்றி பத்துக்கு மேற்பட்ட தடவைகள் போட்டிகளில் வெற்றி பெற்று இந்த நாடகங்கள் ***தங்கப்பதக்கங்களை*** பரிசாகப் பெற்றமை

மேற்படி போட்டிகளில் மன்றத்தினர் பல தடவைகள் சிறந்த நடிக, நடிகைகளகவும் சிறந்த இயக்குனர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டமை

பல காத்திரமான இலக்கிய மலர்களை வெளியிட்டமை

தெல்லிப்பழைக் கிராமத்தின் அம்பனை என்ற சிறு குறிச்சியில் இயங்கிய இம் மன்றத்தினை நாட்டின் தமிழ் அறிஞர்கள், ஆர்வலர் மத்தியில் சிறந்து என பெயர்சொல்ல வைத்தமை

**தெல்லிப்பழை பொது நூலகக் குழு (1972–1975)**

இலங்கை முழுவதிலும் இரண்டு தலை சிறந்த கல்லூரிகளை (மகாஜனா, யூனியன் ) தன்னகத்தே கொண்ட ஒரே கிராமம் என்ற பெருமைக்குரியது ***தெல்லிப்பழையே.*** ஒரு நல்ல நூல்நிலையம் கிராமத்தில் இல்லையே என்ற குறையை வளரும் பருவத்தில் உணர்ந்த இவரும் நண்பர்களும் செய்த பிரச்சாரங்களினாலும் காத்திரமான வேலைகளினாலும் ***பொதுநூலகம்*** அமைப்தற்கான குழு கிராமச்சங்க தலைவர் வழக்கறிஞர் சிதம்பரநாதன் தலைமையில் அமைக்கப்பட்டது. அக்குழுவின் இளைய உறுப்பினராக தெரியப்பட்டு கடமையாற்றியமை

நூலகக்குழுவின் தீர்மானத்தை ஏற்று யூனியன் கல்லூரி மைதானத்தில் ***களியாட்ட விழாவினை*** ஒரு மாதகாலமாக நடாத்தி ***35,000*** ரூபாவினை நூலக ஆரம்ப நிதியாக வைப்பிலிட உதவியமை

1980இல் ஊர் சென்ற வேளையில் அமைக்கப்பட்ட ***பொதுநூலகம்*** எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை உள்ளடக்கியதாக அமையாதது கண்டு சம்பந்தப்பட்டவர்களை அதுபற்றி கவனிக்குமாறு வற்புறுத்தியமை



## *பொதுவாழ்க்கை – சில குறிப்புகள்*

**லண்டன் புதுசுகள் (1982–1983)**

மாணவர்களாக இருந்த தம்பியார் சபேசனும் அவரது நண்பர்களும் எழுதி வெளியிட்ட *புதுசு* சஞ்சிகைக்கு உதவுவதற்காக தொடங்கப்பட்டது.

1983–ம் ஆண்டு யூலை மாதம் லண்டனில் நிதி சேகரிப்பு நிகழ்ச்சி நடாத்தியமை

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக, இன்றைய இந்திய மத்திய அரசாங்கத்தின் அமைச்சராக உள்ள *செஞ்சி இராமச்சந்திரன்* கலந்து கொண்டமை

**லண்டன் கலைப்பெருமன்றம் (1998–2000)**

தனது ஊரையும் அதனது சுற்றாடல்களையும் சேர்ந்த தமிழ் அறிஞர்களையும் கலைஞர்களையும் இங்கு அழைப்பதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது

1998 இல் தெல்லிப்பழையைச் சேர்ந்த தமிழறிஞர் திரு உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களை அழைத்துக் கௌரவித்தமை

தற்போது மல்லிகை சஞ்சிகையை கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாக வெளியிட்டு வருகின்ற திரு டொமினிக் ஜீவா அவர்களை இங்கு அழைத்துள்ளமை

**லூயிசம்–லண்டன் சிவன் கோவில் (1993–1994)**

லூயிசத்தில் நீண்ட காலம் வாழுகின்ற நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று சிவன் கோவில் ஸ்தாபகர்களில் ஒருவரானமை

சிவன் கோவிலின் முதலாவது நிர்வாக சபையிலும் செயற்பட்டமை

19–9–1993 இல் நடைபெற்ற லண்டன் சிவன் கோவில் ஆரம்ப பூசையினை சிறப்பாக நடாத்த உதவியமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மகாஜனக் கல்லூரி பழையமாணவர் சங்கம் (UK) 1987-2000**

மகாஜனக் கல்லூரிக்கு லண்டனில் ஒரு பழையமாணவர் சங்கம் அமைக்க வேண்டும் என்ற அன்றைய கல்லூரி அதிபர் திரு கனகசபாபதி அவர்களின் வேண்டுகொளை ஏற்று 1977 ஆம் ஆண்டு செய்த முயற்சிகள் வெற்றியளிக்காவிடினும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக தமிழ் அரசியலில் ஏற்பட்ட இடைவெளியில் மீண்டும் பழைய மாணவர் சங்கத்தினை உருவாக்க முயற்சித்து வெற்றி பெற்றமை

17-7-87 அன்று லண்டன்-இந்தியா கிளப்பிற்கு பழைய மாணவர்களான ஐந்து பேரை அழைத்து பழையமாணவர் சங்கம் அமைக்க முதல் அடியெடுத்து வைத்தமை

25-10-1987இல் சகலருடனும் சேர்ந்து பழையமாணவர் சங்கத்தை உத்தியோகபூர்வமாக அங்குரார்பணம் செய்தமை

1987 தொடக்கம் முதல் ஆறு ஆண்டுகள் துணைச் செயலாளராக செயற்பட்டமை

1993 தொடக்கம் இன்றுவரை செயலாளராக தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக கடமையாற்றுவது

மகாஜன பழையமாணவர் சங்கத்தினை அனைவரையும் வேறுபாடுகளின்றி அரவணைத்துச் செல்வதன் மூலம் வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு வழிசெய்தமை

அனைத்து பழையமாணவர் சங்கங்களையும் ஒருங்கிணைத்த JSSA / TSSA கூட்டமைப்பில் இணைத்து மகாஜனாவின் பங்களிப்பை உறுதி செய்தமை

பழையமாணவர் சங்கத்தின் சார்பில் இருபதிற்கு மேற்பட்ட வெளியீடுகளை தொகுத்து வெளியிட்டமை

அதிபர் திரு கனகசபாபதியின் மணிவிழாவினை முன்னிட்டு அவரின் கட்டுரைத் தொகுதியினை பிரசுரித்தமை மகாஜன நூற்றாண்டுவிழா நிதியத்தையும் மகாஜன விளையாட்டுச் சங்கத்தையும் அமைக்கும் முயற்சியில் வெற்றிபெற்றமை

கெங்கா - 50

**தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (TSSA) 1991-2000**

விளையாட்டுக்களில் அக்கறை கொண்ட பதினொரு நண்பர்களுடன் சேர்ந்து 24-6-1992 அன்று லண்டன் வாழ் தமிழ்ப்பேசும் மக்களிற்கு ஆண்டுதோறும் ஒரு விளையாட்டுவிழாவையும் நல்லதொரு ஜனநாயக அமைப்பினையும் அறிமுகம் செய்கின்ற முக்கியத்துவமான தீர்மானத்தை மேற்கொண்டமை

தற்காலிக நிர்வாகக்குழுவில் ஏனைய பதினோரு பேருடன் இணைந்து முதலாவது கிரிக்கெட் விழா வெற்றிபெற முயற்சித்தமை

சங்கத்தை பழையமாணவர் சங்கங்களின் கூட்டமைப்பாக மாற்றும் வேலைகளில் உற்சாகத்துடன் செயற்பட்டமை

சங்க வேலைகள். அனைத்திலும் ஆண்டுதோறும் பங்கு கொண்டு ஒத்துழைத்தமை

கிரிக்கெட் போட்டிகளிலும் உதைபந்தாட்டப் போட்டிகளிலும் அமைப்பாளராக செயற்பட்டமை

கடந்த இரண்டு ஆண்டுகளாக சங்கத்தினது செயலாளராக செயற்படுவது

மகாஜன பழையமாணவர்களின் பங்களிப்பை முழுமையாக சங்கத்திற்கு பெற்றுக் கொடுத்தமை

சங்கத்தினுள் நெருக்குதல்கள் வந்த போதெல்லாம் மற்றைய உறுப்பினர்களுடன் ஒத்துழைத்து உதவியமை

ஆசிரியர் திரு யோகரட்னத்தை சிறப்பு விருந்தினராக அழைப்பித்தன் மூலம் கனடாவிலும் JSSA தொடங்க காரணமானமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கெங்கா – 50

### *பொதுவாழ்க்கை – சில குறிப்புகள்*

தமிழ் அகதிகள் அமைப்பு **TRAG (1985)**

1983 யூலை கலவரங்களைத் தொடர்ந்து எமது மண்ணிலிருந்து அகதிகள் வருவதைக் கருத்தில் கொண்டு அரசியல் நண்பர்களுடன் சேர்ந்து TRAG அமைய உதவியமை

அமைப்பின் ஆரம்ப கால நிர்வாகிகள் கூட்டத்தில் காலத்திற்குக் காலம் மலர்ச்சியின் பிரதிநிதியாக கலந்து கொண்டு செயற்பட்டமை

ஈழ அரசியல் கைதிகளை விடுவிக்கும் பிரச்சார அமைப்பு **(1982–1983)**

குட்டிமணி, தங்கத்துரை போன்ற போராளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டதைக் கண்டித்து CREP எனப்படுகின்ற பிரச்சார அமைப்பு உருவாக முன்னின்று உழைத்தது

பாராளுமன்ற உறுப்பினர்களையும் பிரபுக்கள்சபை உறுப்பினர்களையும் சந்தித்து பிரச்சாரங்களை முன்னெடுக்க உதவியமை

1983 யூலையில் இனக்கலவரங்கள் மிகப்பெரிய அளவில் இலங்கையில் வெடித்த வேளையில் ஏனைய நண்பர்களுடனும் தோழர்களுடனும் சேர்ந்து, உடனடியாகவே பிரமாண்டமான ஊர்வலத்தை நடாத்தியமை

தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு CREP பிரச்சார அமைப்பை ஈழப் பிரச்சார அமைப்பாக **Eelam Solidarity Campaign (ESC)** மாற்றுவதற்கும் செயற்படுவதற்கும் உதவியமை

தமிழ் உரிமைக் குழு **Tamil Rights Group (1982-1983)**

வேல்ஸ் தேசிய கட்சியின் தலைவர் டபிட் விக்லி MP தலைமையில் செயற்பட்ட இந்த அமைப்பின் பொருளாளராக ஒரு ஆண்டு செயற்பட்டமை

ஈழத் தேசிய விடுதலை அமைப்பு **( ENLF)**

EPRLF, EROS, TELO, LTTE என்பன இணைந்து செயற்பட்ட வேளையில் இயக்கங்களின் ஒற்றுமைக்கு குரல் கொடுத்து அதன் நிருவாகத்திலும் செயற்பட்டமை

## கெங்கா – 50

### *பொதுவாழ்க்கை – சில குறிப்புகள்*

ஈழப் பிரச்சார ஒன்றியம் **(Eelam Solidarity Campaign)** 1983– 1990

1983 ஆகஸ்ட் மாதம் தொடங்கியதிலிருந்து 1990 இல் தமிழர் பிரச்சனைகளை பிரச்சாரங்களாக, குறிக்கப்பட்ட கருத்துக்கொண்ட சிலர் மட்டுமே செய்யலாம் என்கின்ற நிலை உருவாக்கப்படும் வரையும் அமைப்பின் வேலைகளில் முழுமையாக ஈடுபட்டமை

சிங்கள முற்போக்கு சக்திகளை அமைப்பின் வேலைகளிலும் பிரச்சாரங்களிலும் ஈடுபடுத்தி, பிரச்சனைக்கு ஒரு இனவாதம் இல்லாத முகம் கொடுக்கும் முயற்சியில் போராடி வெற்றிபெற்றமை

இந்தக் காலகட்டத்தில் அரசியலில் அக்கறை கொண்ட பல இளைஞர்களுடன் சேர்ந்து செயற்பட்டதுடன், அவர்களைப் போலவே ஏறத்தாள முழு நேரத்தையும் பிரச்சாரங்களிலும் அரசியல் வேலைகளிலும் செலவுசெய்தமை

இந்தக் காலகட்டத்தில் இடம்பெற்ற ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் ஆகியவற்றை ஒழுங்கு செய்வதற்குப் பொறுப்பாக இருந்தமை

ஒற்றுமைக்கு எல்லா நேரங்களிலும் உரக்க குரல் கொடுத்துச் செயற்பட்டமை

தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இயக்கங்களிடையே ஒற்றுமைக்கு குரல் கொடுத்து, அனைவரையும் இணைத்ததாக இந்த அமைப்பை மாற்றியமை

இயக்கங்கள் பங்குபற்றினாலும் தனித்துவமானதாகச் செயற்படுவதற்கும் தனி இயக்கம் ஒன்று, அமைப்பைக் கைப்பற்றி சீர்குலைப்பதற்கும் இடம் கொடாமை

தமிழ்பேசும் மக்கள் அல்லாதவர்கள் பங்குபற்றி ஆதரவு தரத்தக்கதாக அமைப்பை மாற்ற முயற்சித்து வெற்றி பெற்றமை

அமைப்பின் செயலாளராக 1985 இலிருந்து ஐந்து ஆண்டுகள் செயற்பட்டமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கெங்கா –50

## *அரசியல் வாழ்க்கை – சில குறிப்புகள்*

| | | |
|---|---|---|
| 1965 | தேர்தல் பிச்சாரம் | புரட்சி சம சமாஜ கட்சி (KKS) |
| 1967 | நிர்வாகசபை உறுப்பினர் | ஈழத் தமிழ் மாணவர் மன்றம் |
| 1969–70 | தீவிர ஆதரவு | ஆலயப் பிரவேசப் போராட்டம் |
| 1969 | வி. பொன்னம்பலத்தின் தொடர்பு | கம்யூனிஸ்ட் கட்சி |
| 1970 | தீவிர தேர்தல் பிரச்சாரம் | கம்யூனிஸ்ட் கட்சி |
| 1971–74 | செயலாளர் | கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம், தெல்லிப்பழை |
| 1972–73 | துணைச் செயலாள் | கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் வட பிரதேசம் |
| 1972–73 | செயலாளர் | தேசிய மாணவர் சங்கம் வட பிரதேசம |
| 1975 | தேர்தல் பொறுப்பும் பிரச்சாரமும் | கம்யூனிஸ்ட்–ஐக்கிய முன்னணி காங்கேசன்துறை இடைத்தேர்தல் |
| *1975* | *லண்டன் வருகை* | |
| 1977 | ஊரவலமும் பிரச்சாரமும் | பொது இளைஞர்கள் |
| 1978–80 | விடுதலை இயக்க ஆரம்பம் மத்திய குழு உறுப்பினர் | தமிழர் விடுதலை இயக்கம் |
| 1982–83 | நிர்வாக சபை உறுப்பினர் | ஈழ அரசியல் கைதிகள் விடுதலை பிரச்சார அமைப்பு |
| 1983–84 | நிர்வாக சபை உறுப்பினர் | ஈழப் பிரச்சார ஒன்றியம் |
| 1983–86 | மத்திய குழு உறுப்பினர் | மலர்ச்சி – ரெலோ ஆதரவு அமைப்பு |
| 1985–90 | செயலாளர் | ஈழப் பிரச்சார ஒன்றியம் |
| 1984–86 | இணைப்புக் குழு உறுப்பினர் | ஈழத் தேசீய விடுதலை அமைப்பு |
| 1988– | நிர்வாக சபை உறுப்பினர் | Campaign for Democracy & Justice in Sri Lanka |
| 1994 | ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம் | சந்திரிக்கா பண்டாரநாயக்கா |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு

குடும்பத்தினரும் நண்பர்களும்
89 Leybridge Court
Eltham Road
London SE12 8TQ

21 December 2000

அட்டை

1983 யூலைப் படுகொலைகளை நினைவு கூர்ந்து ESC 1985 யூலையில் லண்டனில் நடத்திய ஊர்வலத்தில் நா.சிறீ கெங்காதரன் உரையாற்றுகின்றார். அருகில் தோழர் வாசுதேவ நாணயக்காரா, தோழர் க. ஆறுமுகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்